**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 72/2014**

பெயர் : சின்னசாமி
சாட்சி – பி.வா.சா–4 நாள்: 17.11.2025

---

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு பற்றிய விவரங்களை தெரிந்து கொண்டு தான் சாட்சியமளிக்கிறேன். வழக்கின் வாதிகள் அல்லது பிரதிவாதிகள் யாரும் எனக்கு உறவினர்கள் கிடையாது. வழக்கு சொத்துக்கள் 1939 மற்றும் 1944 கிரைய ஆவணங்களின் படி அருணாச்சல கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்து என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் எனது சொத்து ஆகியவற்றிற்கு வில்லங்க சான்றிதழ் பார்த்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. அருணாச்சல கவுண்டர் தாவா சொத்தை பொறுத்து யாருக்கும் எந்த பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது சொத்து தாவாசொத்தில் இருந்து 2 கிமீ தள்ளி உள்ளது என்றால் சரியல்ல சுமார் 100 மீட்டர் தொலைவிவேயே உள்ளது. அருணாச்சல கவுண்டரின் மகன் சுப்பராயகவுண்டர் வாதியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அருணாச்சல கவுண்டரின் சொத்தானது அவரது மகன் மற்றும் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. எனது சொத்திற்கும், தாவா சொத்துகளுக்கு எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரிதான். அருணாச்சல கவுண்டரின் சொத்துக்களை அவரது வாரிசுகள் பாகம் பிரித்துக்கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. 1993ம் ஆண்டில் செய்துகொண்டதாக சொல்லும் பிழைதிருத்தல் பத்திரத்தினை அருணாச்சல கவுண்டர் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அருணாச்சல கவுண்டரின் வாரிசுகளும் பிழைதிருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் ஜெயலட்சுமி எழுதிக்கொடுத்துள்ளார். அவர் அருணாச்சல கவுண்டரின் பேத்தி ஆவார். அருணாச்சல

கவுண்டரின் மகனோ, அல்லது மகளோ யாரேனும் எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை.

4. சுந்தரத்திற்கு அருணாச்சல கவுண்டரின் மகனோ, அல்லது மகளோ யாரேனும் கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. 2004ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்திற்கான பட்டா அருணாச்சல கவுண்டரின் பெயரில் தான் இருந்து என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் எனது சொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றும், சுந்தரம் வழக்கு சொத்தில் உரிமை இல்லாத நபர்களிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றும், எனவே அவருக்கு எந்த உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றால் சரியல்ல.

5. நான எனது சொத்தில் கறிகோழி நிறுவனம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது சொத்திற்கு அருகில் தாவா சொத்து இருப்பதால் நான் சுந்தரம் மற்றும் அவரது மகனிடம் இருந்து சொத்தை வாங்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. நான் சுந்தரதிற்கு ஆதரவாக அவரது மகன்கள் சொல்லி கொடுத்தவாறு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருணாச்சல கவுண்டர் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ள விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஜெயலட்சுமி சொல்லி தான் தெரியும்.

6. எனது சொத்தையும் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்று நானே அனுமானம் செய்து கொண்டு சுந்தரம் மகன் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.17 18:35:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.